முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்

O.S.No.147/2011

Witness–DW1

பெயர். சுசீலா

க/பெ – சோலையன்

இன்று (06.04.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

எனக்கு சொந்த ஊர் விழுப்புரம் என்றால் சரிதான். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள், 2 மகள்கள். எனது கடைசி மகளுக்கு எந்த வருடம் திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் 1997. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ராஜுமோகன் எனது பெரிய மகன் என்றால் சரிதான். அவர் பொற்கொல்லர் நகை வேலை செய்கிறார் என்றால் சரிதான். அவர் பொற்கொல்லர் வேலையில் நொடிந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பொற்கொல்லர் வேலையில் நொடிந்துவிட்டார் என்றும் அவருக்கு தேகலீசன், சுரேஷ் மற்றும் அமுதா ஆகியோர்கள் வட்டிக்கு பணம் கொடுத்தாக புகார்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் கந்து வட்டிக்கு பணம் கொடுத்தாக புகார் கொடுத்துள்ளேன். அந்த புகாரில் தேசலீசன் என்பவர் என்னிடம்எ ன் வீட்டிற்கு வந்து தண்ணீர் கொடுங்கல் என்று கேட்டு நான் தண்ணீர்எ டுக்க சென்றபோதுஎ ன்னை மிரட்டி என்னிடம் கையெழுத்து பெற்று்கொண்டார்கள் என்றும், போலிசில் புகார் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்று நான் மருத்துவமனையில் போய்சேர்ந்தேன் என்றால் சரிதான். இந்த சங்கதிகள் நடந்தது என்று எஸ் ராஜகுரு என்ற வழக்கறிஞர் வைத்து தேகலீசன், சுரேஷ் மற்றும் அமுதா ஆகயோர்களுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான் அது தான் பி.த.சா.ஆ1 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமான அழைப்பாணையை நீதிமன்ற அமீனா மூலம் பெற்றேனா அல்லது அஞ்சல் மூலம் வாங்கினேனா என்றால் அது எனது கணவருக்கு தான் தெரியும் எனக்கு ஞாபகம் இல்லை. நீதிமன்றம் மூலம் பிராது நகலுடன் அனுப்பிய அழைப்பாணையை நான் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் அது எனது கணவருக்கு தான் தெரியும். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வருவதை தெரிந்துகொண்டு அதனை வாங்காமல் காவல் நிலையத்திற்கு சென்று பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தேகலீசன் என்பவர் எனது மகன்

ராஜுமோகன் பொற்கொல்லர் வேலைக்கு தங்கம் கொடுத்தார் என்றும் அதனை திருப்பி கேட்ட வகையில் தகராறு ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இநத கந்துவட்டி சமாச்சாரம், மற்றும் தங்கம் கொடுத்த சங்கதிகள் போன்றவற்றை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தேகலீசன், சுரேஷ் மற்றும் அமுதா ஆகியோர் என்னிடமிருந்து மிரட்டி கையெழுத்து வாங்கிய ஆவணங்கள் இன்னமும் அவர்களிடம் உள்ளது என்று போலிசில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் கையெழுத்து போடப்பட்டு தேகலீசன், சுரேஷ் மற்றும் அமுதா ஆகியோர்களால் எடுத்துச்செல்லப்பட்ட ஆவணங்களை போலிசார் விசாரரைணயில் அதனை கைப்பற்றிவிட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தேகலீசன், சுரேஷ் மற்றும் அமுதா ஆகியோர்களை எத்தனை வருடமாக தெரியும் என்றால் தேகலீசன் என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது சுரேஷ் என்பவர் எனது மகனுடன் இருந்ததல் எனக்கு தெரியும், சுரேஷ் என்பவர் வட்டிக்கு பணம் கொடுப்பவர் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சுரேஷ் என்பவரிடம் எனது மகளின் திருமணத்திற்கு பண உதவி ஏற்பாடு செய்து தர கேட்டதன் அடிப்படையில் சுரேஷ் வாதி அமுதா என்பவர் எனக்கு அறிமுகப் படுததி அவரிடமிருந்து தாவா கடனை ஏற்பாடு செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. அமுதா இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பாண்டினை நான் பார்வையிட வேண்டுதல் கேட்டு அதனை பார்த்தேனா என்றால் இல்லை. அமுதா என்பவரிடமிருந்து கடனை பெற்றுகொண்டு அவரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்திற்காக கோணல்மானலாக கையொப்பமிட்டு தாவா பிராமிசரிநோட்டை அவரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வேண்டுமென்றே என்னுடைய கைரேகையை சிதறலாக பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கையொப்பம் மற்றும் கைரேகையை அறிவியல்பூர்வ ஆய்வு செய்து அறிக்கை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அந்த அறிக்கையில் கைரேகை கலங்களாக உள்ளதால் கண்டறிய இயலவில்லை என்று அறிக்கை செய்யப்பட்டுளள்து என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்த பிறகு அவரை ஏமாற்ற வேண்டுமென்ற நோக்த்தில் பொய்யாக புகார், பொய்யாக அறிவிப்பு, பொய்யான எதிர்வழக்குரை, பொய்யான முதன்மை சாட்சியம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை மாற்றி மாற்றி எனது புகார் அறிவிப்பு , எதிர்வழக்குரை முதன்மை சாட்சியம் ஆகியவைகளில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல . வாதி அமுதா தாவா பிராமிசரி நோட்டை போர்ஜரியாக தயாரித்துள்ளார் என்று மட்டும் தான் கூறியுள்ளேன் முன் தேதியிட்டு தயாரித்தாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி அமுதாவிடம் கடனை பெற்றுகொண்டு நானே பொய்யாக கையொப்பம் போட்டு தற்போது பொய்யான எதிர்வாதம் வைக்கிறேன் என்றால்

சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- A.Tamilselvan, M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram